ந.க.எண்.006547/கா.ம.நி-2/2021

காவல்துறை தலைமை இயக்குநர்
அலுவலகம், தமிழ்நாடு, சென்னை-04.

நாள்: 27.04.2022.

**சுற்றறிக்கை குறிப்பாணை**

**பொருள் :** நலன் பிரிவு – புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம், 2021 – காப்பீடு தொடர்பான விவரங்கள் தெரிவித்தல் - தொடர்பாக.

**பார்வை:**
1. அரசாணை எண்.160, நிதி (ஊதியம்) துறை, நாள்: 29.06.2021.
2. தலைமை அலுவலக சுற்றறிக்கை குறிப்பாணை இதே எண். நாள் 21.09.2021.
3. அரசாணை எண்.293, நிதி (மருத்துவ காப்பீடு-1) துறை, நாள்:30.12.2021.

-o0o-

பார்வை 1-இல் காணும் அரசாணையின்படி, அரசு ஊழியர்கள் மற்றும் அவர்களது தகுதியான குடும்ப உறுப்பினர்கள் பணச்செலவில்லா மருத்துவ வசதியை பெறுவதற்கு, புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம், 2021, யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

(2) புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம், 2021-இல் உள்ள காப்பீடு மற்றும் வசதிகள் தொடர்பான விவரங்கள், பார்வை 2-இல் காணும் தலைமை அலுவலக சுற்றறிக்கை குறிப்பாணை மூலம் தெரிவிக்கப்பட்டு, அவ்விவரங்களை அனைத்து காவலர்களும் அறியும் வண்ணம் காவல் நிலையங்களில் உள்ள அறிவிப்பு பலகையில் ஒட்டி வைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(3) காவலர்கள் புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம் தொடர்பான விவரங்களை எந்தளவு தெரிந்து வைத்துள்ளனர் என்பதை அறிந்துகொள்ள மேற்கொண்ட கள ஆய்வில், பெரும்பாலான காவல் ஆய்வாளர்களுக்கு மற்றும் 60% காவல் ஆளிநர்களுக்கு முழுமையான விவரங்கள் தெரியவில்லை எனத் தெரிய வருகிறது. இதனால் காவலர்கள் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் விவரங்கள் அறியாமல், அரசால் காப்பீட்டுக்கு அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொள்வதால், காப்பீட்டு தொகை பெறமுடியாத சூழ்நிலை உள்ளது.

(4) பார்வை 3-இல் காணும் அரசாணையில், மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றம் மகள்கள் ஆகியோர் அவர்களது வயது வரம்பினைக் கருத்தில் கொள்ளாமல் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெற ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(5) புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் தொடர்பான விரிவான விவரங்கள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

**1. காப்பீட்டு காலம்:**

மருத்துவ காப்பீட்டு வசதியானது, **01.07.2021 முதல் 30.06.2025** வரையிலான 4 வருட தொகுப்பு ஆண்டிற்கு வழங்கப்படும்.

**2. காப்பீட்டு தொகை:**

அரசாணை எண்.160, நிதி (ஊதியம்) துறை, நாள்: 29.06.2021 இணைப்பு-Iஇல் வகைப்படுத்தப்பட்டுள்ள 203 நோய்களுக்கான சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அதிகபட்சமாக **ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்)** வரை வழங்கப்படும்.

இணைப்பு-IA-இல் வகைப்படுத்தப்பட்டுள்ள 7 வகையான நோய்களுக்கான சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அதிகபட்சமாக **ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம்)** வரை வழங்கப்படும்.

மேலும் அரிதான நோய்கள் மற்றும் சிகிச்சைகளுக்கு, **ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம்)** வரை உயர்மட்ட குழுவின் பரிந்துரையின்பேரில் வழங்கப்படும்.

கண்புரை சிகிச்சைக்கு அதிகபட்சமாக ஒரு கண்ணிற்கு ரூ.30,000/- வரையிலும் மற்றம் கர்ப்பப்பை நீக்கத்திற்கு அதிகபட்சமாக **ரூ.50,000/-** வரையிலும் வழங்கப்படும்.

**3. காப்பீட்டு சந்தா தொகை:**

புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம்-2021-இல், மாதாந்திர சந்தா ரூ.300/- (ரூபாய் முன்னூறு மட்டும்) ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும். கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் மாநில அரசு ஊழியர்களாக இருப்பின், இருவரில் யார் இளையவரோ, அவரது ஊதியத்தில் மட்டும் சந்தா தொகை பிடித்தம் செய்யப்படும்.

**4. காப்பீட்டு திட்டத்தில் இணைவதற்கு தகுதியற்றவர்கள்:**

கீழ்கண்ட வகையில் நியமணம் பெற்று பணிபுரிபவர்கள், இத்திட்டத்தில் இணைவதற்கு தகுதியற்றவர்கள்.

| | |
|---|---|
| a. | Consolidated Pay/Fixed Pay/Honorarium |
| b. | Daily Wage |
| c. | Contract basis |
| d. | Re-Employment |
| e. | Temporary basis under rule 10(a)(i) of Tamil Nadu State and Sub-ordinate services through Employment Exchange. |
| f. | Outsourcing |

5. **அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளுக்கான காப்பீடு:**

(i) மேற்கண்ட அரசாணையில் உள்ள இணைப்பு-IIஇல், அங்கீகரிக்கப்பட்ட 1169 மருத்துவமனைகளின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனைகளில், அரசாணையின் இணைப்பு-Iஇல் வகைப்படுத்தப்பட்டுள்ள 203 நோய்களுக்கான சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு பணச்செலவில்லா சிகிச்சை ரூ.5 இலட்சம் வரையிலும் மற்றும் இணைப்பு-IAஇல் வகைப்படுத்தப்பட்டுள்ள 07 நோய்களுக்கான சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு பணச்செலவில்லா சிகிச்சை ரூ.10 இலட்சம் வரையிலும் வழங்கப்படும்.

(ii) அரசாணையின் இணைப்பு-IVஇல் குறிப்பிடப்பட்டுள்ள, சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் 180 வகையான பொருட்களுக்கான செலவு தொகைகள், பணச்செலவில்லா சிகிச்சையின் வரம்பிற்குள் வராது.

(iii) அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில், அரசாணையின் இணைப்பு-I மற்றும் IAஇல் வகைப்படுத்தப்பட்டுள்ள நோய்களுக்கான சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு, அச்சிகிச்சை அவசர தன்மை உடையது (Emergency Care) எனக் கருதப்படும் பட்சத்தில், சிகிச்சைக்கான தொகையை மருத்துவமனையில் செலுத்திய பின், அத்தொகையில், தகுதியான செலவுத் தொகையை மீளப்பெறலாம்.

(iv) அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில், அரசாணையின் இணைப்பு-I மற்றும் IAஇல் வகைப்படுத்தப்பட்டுள்ள நோய்களுக்கான சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு, அச்சிகிச்சை அவசர தன்மையற்றது (Non-Emergency Care) எனக் கருதப்படும் பட்சத்தில், சிகிச்சைக்கான தொகையை மருத்துவமனையில் செலுத்திய பின், அச்சிகிச்சையை அங்கீகரிக்கப்பட்ட கடைநிலை (Lowest Grade) மருத்துவமனையில் மேற்கொண்டிருந்தால் ஏற்படும் செலவீனத் தொகையில் 75% தொகையை மீளப்பெறலாம்.

6. **தகுதியான குடும்ப உறுப்பினர்கள்:**

1. கணவன் (அல்லது) மனைவி.
2. அரசு ஊழியரை சார்ந்து வாழும் வேலையற்ற மற்றும் திருமணமாகாத / மேற்படிப்பு படித்து வரும் / விவாகரத்து பெற்ற குழந்தையில்லாத மகள் / குறைந்தபட்சம் 40 சதவீத அளவு உடல் ஊனமுற்ற மற்றும் மனநலம் குன்றிய மகன் மற்றும் மகள் - வயது வரம்பின்றி.
3. திருமணம் ஆகாத அரசு ஊழியர்களின் பெற்றோர்கள்.
   **(அரசு ஊழியருக்கு திருமணம் ஆகும் வரை)**
4. விவாகரத்து பெற்ற அரசு ஊழியருக்கு குழந்தைகள் இல்லாத பட்சத்தில், அவரது பெற்றோர்கள்.
   **(விவாகரத்து பெற்ற அரசு ஊழியர் மறுமணம் செய்துகொள்ளும் வரை)**

**7. காப்பீட்டு தொகை தொடர்பான குறைதீர்ப்பு முறையீடு:**

இத்திட்டத்தில் சந்தாதாரர்கள் சிகிச்சை மற்றும் காப்பீட்டு தொகை பெறுவதில் ஏற்படும் குறைகள் தொடர்பாக சம்மந்தப்பட்ட மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை இணை இயக்குநரிடம் தொடர்புடைய மருத்துவ ஆவணங்களின் நகல்கள் மற்றும் தொகை மீளப்பெறுவதற்கான படிவத்துடன் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் மனு செய்து முறையிடலாம்.

முறையீடு தொடர்பாக, மாவட்ட மருத்துவம் மற்றும் ஊரக நலத்துறை இணை இயக்குநர் அவர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, தொகை மீளப்பெறுவது தொடர்பான தகுதி அறிக்கையுடன் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் நடைபெறும் மாவட்ட அளவிலான அதிகாரம் பெற்ற குழு கூட்டத்தின் பரிந்துரைக்கு மேலனுப்பப்படும்.

மாவட்ட அளவிலான அதிகாரம் பெற்ற குழுவில் கோரிக்கை ஏற்கப்படாத பட்சத்தில், சந்தாதாரர் மேல்முறையீடு செய்ய விரும்பினால், மாவட்ட அளவிலான அதிகாரம் பெற்ற குழுவிடமிருந்து பதில் பெறப்பட்ட 30 நாட்களுக்குள், சென்னை கருவூலம் மற்றும் கணக்குத்துறை ஆணையரிடம் மேல்முறையிடலாம்.

**8. உதவி தொலைபேசி எண்:**

கட்டணமில்லா தொலைபேசி எண் - **1800 233 5666.**

(6) புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்-2021 தொடர்பான விவரங்கள் சுருக்கமாக இணைப்பில் தொகுக்கப்பட்டுள்ளது. அவ்விவரங்களை அனைத்து காவலர்களும் அறியும் வண்ணம், காவல் நிலையங்களில் உள்ள அறிவிப்பு பலகையில் ஒட்டி வைக்கப்பட வேண்டும். மேலும் அரசாணை எண்.160, நிதி (ஊதியம்) துறை, நாள்: 29.06.2021-இல் தெரிவிக்கப்பட்டுள்ள மாவட்ட வாரியான அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் பட்டியல்களையும் அறிவிப்பு பலகையில் ஒட்டி வைக்கப்பட வேண்டும்.

(7) சம்மந்தப்பட்ட மாநகர/மாவட்ட/சிறப்பு பிரிவு அதிகாரிகள் இதன் மீது தனிக் கவனம் செலுத்தி, மேற்கண்ட விவரங்களை கடைசி காவலர் வரை தெரிந்துகொள்ளும் விதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதனை தலைமை அலுவலகத்திற்கு தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: மேற்கண்டவாறு.

28/04/2022

காவல்துறை தலைமை இயக்குநருக்காக,

28/04/22

பெறுநர்
அனைத்து பிரிவு அதிகாரிகள்.

## இணைப்பு

**புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்-2021 தொடர்பான விவரங்கள்**
**அரசாணை எண்.160, நிதி (ஊதியம்) துறை, நாள்: 29.06.2021**

| | |
|---|---|
| காப்பீட்டு காலம் | 01.07.2021 முதல் 30.06.2025 வரை |
| காப்பீட்டு தொகை | 203 நோய்களுக்கு **ரூ.5,00,000/- (அரசாணை-இணைப்பு-I)**<br>07 குறிப்பிட்ட நோய்களுக்கு **ரூ.10,00,000/- (அரசாணை-இணைப்பு-IA)**<br>அரிதான நோய்களுக்கு **ரூ.20,00,000/-** |
| சந்தா தொகை | **ரூ.300/-** பிரதி மாதம் |
| அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் | 1169 மருத்துவமனைகள் - அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகளுக்கு பணச்செலவில்லா மருத்துவம். **(அரசாணை-இணைப்பு- II)** |
| அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகள் | அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் அவசரதன்மை உடையது எனில், சிகிச்சைக்கான செலவுத் தொகையை செலுத்திய பின், தகுதியான தொகையை காப்பீட்டு திட்டத்தில் மீளப்பெறலாம் |
| | அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் அவசர தன்மையற்றது எனில், சிகிச்சைக்கான செலவு தொகையை செலுத்திய பின், அச்சிகிச்சையை அங்கீகரிக்கப்பட்ட கடைநிலை (Lowest Grade) மருத்துவமனையில் மேற்கொண்டிருந்தால் ஏற்படும் செலவீனத் தொகையில் 75% தொகையை காப்பீட்டு திட்டத்தில் மீளப்பெறலாம். |
| தகுதியான குடும்ப உறுப்பினர்கள் | 1. கணவன் (அல்லது) மனைவி.<br>2. அரசு ஊழியரை சார்ந்து வாழும் வேலையற்ற மற்றும் திருமணமாகாத / மேற்படிப்பு படித்து வரும் / விவாகரத்து பெற்ற குழந்தையில்லாத மகள் / குறைந்தபட்சம் 40 சதவீத அளவு உடல் ஊனமுற்ற மற்றும் மனநலம் குன்றிய மகன் மற்றும் மகள் - வயது வரம்பின்றி.<br>3. திருமணம் ஆகாத அரசு ஊழியர்களின் பெற்றோர்கள். **(அரசு ஊழியருக்கு திருமணம் ஆகும் வரை)**<br>4. விவாகரத்து பெற்ற அரசு ஊழியருக்கு குழந்தைகள் இல்லாத பட்சத்தில், அவரது பெற்றோர்கள். **(விவாகரத்து பெற்ற அரசு ஊழியர் மறுமணம் செய்துகொள்ளும் வரை)** |
| உதவி தொடர்பு எண் | **1800 233 5666** |